Uva Wellassa University

தேசத்தின் அபிவிருத்திக்கு பங்களிப்புச் செய்து பெருமை கொள்வோம்

வெற்றிடங்கள் - கல்விசார்

முகாமைத்துவ பீடம் – இலங்கை ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்

முகாமைத்துவ பீடத்தில் உள்ள கல்விசார் வெற்றிடங்களுக்கு அழைப்பு விடுக்கப்படுவதோடு தேவையான தகைமைகள் பின்வருமாறு,

முகாமைத்துவ பீடம்

01. சுற்றுலா கற்கைகள் பிரிவு

பதவி: சிரேஷ்ட விரிவுரையாளர் தரம் I/ கனிஷ்ட விரிவுரையாளர் தரம் II/ விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதவர்)/ விரிவுரையாளர் (தகுதிகாண்)

விடயப் பரப்பு 1: விருந்தோம்பல் முகாமைத்துவம் - அறைகள் பிரிவு முகாமைத்துவம்

கல்வித் தகைமை: விண்ணப்பதாரர்கள் தொடர்புடைய தகைமைகளுடன் சேர்த்து விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா முகாமைத்துவத்தில் BBM/ BSc (கௌரவ) தகைமையை பெற்றிருத்தல்.

விசேட குறிப்பு: தொடர்புடைய தொழில்துறை ஒன்றில் தொழில்முறை அனுபவத்தை நிரூபிக்கக்கூடிய அபேட்சகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

02. சுற்றுலா கற்கைகள் பிரிவு

விடயப் பரப்பு 01: விருந்தோம்பல் முகாமைத்துவம்: சமையலறை செயற்பாடுகள்

கல்வித் தகைமை: விண்ணப்பதாரர்கள் தொடர்புடைய தகைமைகளுடன் சேர்த்து விருந்தோம்பல் மற்றும் சுற்றுலா முகாமைத்துவத்தில் BBM அல்லது BSc (கௌரவ) தகைமையை பெற்றிருத்தல்.

விசேட குறிப்பு தொடர்புடைய தொழில்துறை ஒன்றில் தொழில்முறை அனுபவத்தை நிரூபிக்கக்கூடிய அபேட்சகர்களுக்கு முன்னுரிமை அளிக்கப்படும்.

மேலதிக குறிப்பு: தேவைகளுக்குப் பொருத்தமான விசேட துறைகளில் தகைமைகளைக் கொண்ட விண்ணப்பதாரர்கள், உரிய பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழுவின் (UGC) சுற்றறிக்கை இலக்கங்களான 721, 996, 08/2016 மற்றும் 07/2018 ஆகியவற்றைப் பார்வையிடுமாறும் அல்லது www.ugc.ac.lk என்ற இணையத்தளத்தை அணுகுமாறும் கேட்டுக்கொள்ளப்படுகின்றனர்.

விரிவுரையாளர் (உறுதிப்படுத்தப்படாதவர்) மற்றும் சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் I/II) ஆகிய பதவிகளுக்கான அத்தியாவசியத் தகைமையாக, உரிய சுற்றறிக்கைகளில் குறிப்பிடப்பட்டுள்ள முதுமாணிப் பட்டம் அவசியமாகும்.

மேலும், பல்கலைக்கழகக் கட்டமைப்புக்குப் பொருந்தும் அரசாங்கத்தினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகளும் வழங்கப்படும்.

முறையாகப் பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பங்களை, உரிய சான்றிதழ்களின் பிரதிகளுடன் (கல்விப் பெறுபேற்றுப் பட்டியல் உட்பட) பதிவுத் தபால் மூலம் சிரேஷ்ட உதவிப் பதிவாளர், மனிதவளப் பிரிவு, ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம், பஸ்ஸர வீதி, பதுளை என்ற முகவரிக்கு 2026.12.11 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

ஊதியம் மற்றும் நன்மைகள்

சம்பள அளவு

- விரிவுரையாளர் (தகுதிகாண்) - [U-AC 3(IV)]
  ரூபா 94,400 -10 x 2,400 – 118,400 p.m.
- விரிவுரையாளர் (உறுதிசெய்யப்படாதவர்) - [U-AC 3(III)]
  ரூபா 121,340 -5 x 2,940 – 136,040 p.m.
- சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் II) - [U-AC 3(II)]
  ரூபா 138,980 -11 x 2,940 – 171,320 p.m.
- சிரேஷ்ட விரிவுரையாளர் (தரம் I) - [U-AC 3(I)]
  ரூபா 160,520 -7 x 3,900 – 187,820 p.m.

கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் குறித்த பதவியை குறிப்பிடவும்.

விண்ணப்பப் படிவம், விருப்பத் தகுதிகள் மற்றும் மற்ற தொடர்புடைய விபரங்கள் www.uwu.ac.lk. என்ற பல்கலைக்கழக இணையதளத்திற்கு பிரவேசித்து பெற முடியும்.

ஒன்றுக்கு மேற்பட்ட பதவிகளுக்கு விண்ணப்பிக்கும் அபேட்சகர்கள் ஒவ்வொரு பதவிக்கும் வெவ்வேறு உறைகளில் வெவ்வேறாக விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும். விருப்பப்பாடத் துறையை விண்ணப்பப் படிவத்தில் தெளிவாகக் குறிப்பிடவும்.

பல்கலைக்கழக அமைப்பு/ அரச திணைக்களங்கள்/ கூட்டுத்தாபனங்கள் மற்றும் சட்டரீதியான சபைகளின் விண்ணப்பதாரர்கள் குறித்த நிறுவனங்களின் தலைவர்கள் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். முறையான வழிகளால் அன்றி கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் பரிசீலிக்கப்படாது நிராகரிக்கப்படும்.

முழுமை பெறாத விண்ணப்பங்கள், ஆதரவு ஆவணங்கள் இல்லாத விண்ணப்பங்கள் மற்றும் இறுதித் திகதிக்குப் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் கருத்தில் கொள்ளப்படமாட்டாது. அபேட்சகர்களை குறுகிய பட்டியலில் இணைப்பது மற்றும் அவ்வாறான அபேட்சகர்களை நேர்முகப்பரீட்சைக்கு அழைக்கும் உரிமை பல்கலைக்கழகம் வசமானது.

பதில் பதிவாளர்
ஊவா வெல்லஸ்ஸ பல்கலைக்கழகம்,
பஸ்ஸர வீதி, பதுளை.

2026.11.09